செ. கு. எண்: 333 நாள் :20.12.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 20.12.2013

13.11.2013 அன்று கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், பூவாணிக்குப்பம் தெற்கு கிராமம் அருகே வயல் பகுதிக்குச் செல்லும் போது அறுந்து கிடந்த மின்சார கம்பியை மிதித்ததால் பூவாணிக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்புராயன் என்பவரின் மகன் சக்கரவர்த்தி;

14.11.2013 அன்று சென்னை, வால்டாக்ஸ் சாலையில் தனியார் பட்டறையில் வேலை செய்து கொண்டிருந்த போது, கால் தவறி மின்மாற்றியில் விழுந்து காந்திபுரம், திடீர் நகர் பகுதியைச் சேர்ந்த திரு. ஜெயகாந்தன் என்பவரின் மகன் ராஜா;

15.11.2013 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், பெரும்பாக்கம் கிராமத்தில் கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்த போது அருகிலிருந்த மின்சார கம்பி உடலில் பட்டு பெரும்பாக்கம் கிராமம், நேசமணி நகரைச் சேர்ந்த திரு. முனுசாமி என்பவரின் மகன் சின்னதுரை;

23.11.2013 அன்று திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், வானகரம் கிராமம், ஆண்டாள் நகரில் பதாகை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் போது அருகிலிருந்த மின்சார கம்பியை மிதித்தால் வானகரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சங்கர்;

–– ஆகியோர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9